நாவலர் கல்வி

(மேன் கல்வி. ஆசிரியர் சங்கத்தின் நாவலர்க்காலப் பத்திரிகை.)

4.

JUNE 1936

JL
1ம211,N:
N36·1·4
161804

[பகுதி 4

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

~~433~~ 1640

தாது ௵ ஆனி ௴
JUNE, 1936

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


1. பாலர் வகுப்பு என் இடவேலை ... ... 97
—எஸ். ஜகந்நாதன்

2. கல்விப் பயிற்சி ... ... 107
—ரெவ் H. A. பாப்லி B.A.,

3. கதைப் பாட்டு ... ... 110
—R. வெங்கடாச்சாரி.

4. ஆரம்ப ஆசிரியரும் மனோதத்துவ சாஸ்திரமும் ... 111

5. சித்திரா விசித்திரம்—2 ... ... 114
—அ. ஸ்ரீனிவாஸ ராகவன்

6. நமது தர்மம் ... ... 117
—எஸ். ஜகந்நாதன்

7. கல்விச் செய்தியும் குறிப்பும் ... ... 122

8. பத்திராதிபர் குறிப்பு ... ... 123

9. ரக்ஷணைப்படம் ... .... ...


## கௌரவப் பத்திராதிபர்கள்


S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷூல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்


161804

# பாலர் கல்வி

தொகுதி 1] 1936ஹு ஜூன்மீ [பகுதி 4

## பாலர் வகுப்பு என் இடவேலை

### சில விளையாட்டுகளும் உபகரணங்களும்

—(All rights reserved)—

S. ஜகன்னாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

பாலர் வகுப்புப் பாடங்களே ஆரம்பப் பள்ளிக்கூடப் பாடங்கள் எல்லாவற்றிலும் மிகப் பொறுப்பு வாய்ந்ததும் கடினமானதுமாக இருக்கின்றன. ஏனெனில், அங்கு அப்பொழுதுதான் புதிதாகக் கல்வி பயில வரும் குழந்தைகளின் தேகம், மனம் இவை கல்வியை ஏற்றுக்கொள்ளக் கூடிய பக்குவ நிலையை அடையவில்லை. முழு மனதையும் ஒழுங்குபடுத்திக் கல்வியிலேயே கவனத்தைச் செலுத்த அசக்தர்களாயிருக்கிறார்கள். ஆகவே மனப்பழக்கம் கொடுத்துக் கல்வியைப் புகட்டு முன்பே, பஞ்சேந்திரியங்கள் மூலமாகக் கல்வியைப் புகட்டுவது ஏற்றதாகும். ஐம்புலன்களுக்கு ஏற்றதும், கல்வியைக் கிரகித்துக்கொள்ளக் கூடியதுமான பயிற்சிகளைக் கொடுக்கவல்ல சாதனங்களை அமைத்துக்கொள்ளுதலே உபாத்தியாயரின் சிறந்த பொறுப்பாக இருக்கிறது. எல்லாப் பாடங்களிலும் கடினமாகக் கருதப்படும் கணித பாடத்திற்குச் சரியான சாதனங்களைக் கண்டறிவதும், அவற்றைக் கையாண்டு போதுமான அளவு பயிற்சி கொடுப்பதும் சற்றுச் சிரமமான காரியமே. ஆயினும் எல்லாக் காரியங்களிலும் அசாத்தியம் ஒன்றுமில்லை என்று நம்புகிற சிலர் ஏதாவது சாதனங்களைக் கண்டறிய வழி தேடிக்கொண்டே இருப்பார்கள்.

குழந்தைகளின் ஜீவாதாரம் விளையாட்டு. அவர்களது கையும் காலும் ஒரு நிமிஷமும் சும்மா இரா. ஆகவே விளையாட்டு மூலமாகவும், கை கால்கள் இவற்றிற்குப் பயிற்சி கொடுத்தும் முதன் முதல் கணித பாடங்களை ஆரம்பித்து நடத்தல்வேண்டும். இங்குக் காட்டிய படங்களைக் கவனிக்கவும். இம்மாதிரி விளையாடத் தென்னங் குரும்பை, தென்னம் ஈர்க்கு,

கொருக்கைத் தட்டைக் குழாய், மெல்லிய கயிறு, சிறு சிறு குச்சிகள் இவைகளே போதியவை. இவைகளைச் சேகரித்து இவ்வாறு விளையாடச் செய்வது சரியான மார்க்கமாகும்.

JL
T..211, N36







## ஒற்றையோ, இரட்டையோ

இவைகளைத் தவிரச் சில விளையாட்டுக்களும் உள்ளன. குழந்தைகள் "தட்டாமாலை தாமரைப் பூ" என்று சொல்லி, காலால் ஒரு வட்டம் வரைவார்கள். அம்மாதிரி வட்டம் வரைந்து கணக்கிடுதல் நல்லது.



மேலும் "ஒற்றையோ இரட்டையோ" என்னும் விளையாட்டு நேர்த்தியானதே. ஒரு குழந்தை ஒரு பிடி சோழி, மணி, புளியங்கொட்டை குன்றிமணி இவற்றை ஒரு கையில் மூடி வைத்துக்கொண்டு, மற்றொரு குழந்தையை "ஒற்றையோ, இரட்டையோ" என்று கேட்கிறது. எதிரிலுள்ள குழந்தை ஒற்றை என்று சொல்லுவதாக வைத்துக்கொள்வோம். பிறகு முதல் குழந்தை கையைத் திறந்து கையிலுள்ள விதைகளை அடியிற் கண்டபடி இரட்டை இரட்டையாக வைக்கிறது. கடைசியில் ஒன்றே ஒன்று மீந்தால் ஒற்றை என்றும், ஒன்றும் மிஞ்சாவிட்டால் இரட்டையென்றும் சொல்லக் கற்றுக்கொள்ளுகிறது. இரட்டை இரட்டையாக வைக்கப் பயிற்சி கொடுக்க இவ் விளையாட்டு இடந்தருகிறது. ஒன்று முதல் ஐந்துவரைக்கும் எண்ணப் பயிற்சி கொடுக்க மேலே சொன்ன விளையாட்டுக்களும் பயிற்சிகளும் ஏற்றவையாகும்.



பள்ளிக்கூடம் வந்தவுடனேயே ஒன்று இரண்டு என்று வாயால் சொல்லிச் சிலேட்டில் 1, 2, 3 என்று எழுதுவதை நிறுத்திவைத்து வாயால் சொல்லுகிற ஒவ்வோர் எண்ணும் எத்தனை வஸ்துக்களைக் குறிக்கின்றன என்பதில் தக்க பயிற்சி கொடுப்பதுதான் சாலச் சிறந்த பால போதன முறையாகும். ஆகவே 6 முதல் 10 வரைக்கும் ஒன்றிலிருந்து பத்துவரைக்கும் உள்ள எண்களைப் பன்முறை அப்பியாசம் செய்வித்து, வேறு சில சாமக்கிரியைகளையும் சாதனங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

## பாட்டும் கணித பாஷையும்

நான் ஓர் ஊருக்குப் போயிருந்தேன். சாயங்காலம் தெருவில் உட்கார்ந்து சில குழந்தைகள் விளையாடுவதைக் கவனித்தேன். ஒரு குழந்தை சில சிறு குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தது. பெரிய குழந்தை சிறு குழந்தைகளுக்கு அடியிற்கண்ட பாட்டைப் பாடியது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது.



ஒரு குடம் ஜலம் ஊற்ற ஒரு பூ பூத்ததாம்
இரண்டு குடம் ஜலம் ஊற்ற இரண்டு பூ பூத்ததாம்

மூன்று குடம் ஜலம் ஊற்ற மூன்று பூ பூத்ததாம்
நான்கு குடம் ஜலம் ஊற்ற நான்கு பூ பூத்ததாம்
ஐந்து குடம் ஜலம் ஊற்ற ஐந்து பூ பூத்ததாம்
ஆறு குடம் ஜலம் ஊற்ற ஆறு பூ பூத்ததாம்
ஏழு குடம் ஜலம் ஊற்ற ஏழு பூ பூத்ததாம்
எட்டு குடம் ஜலம் ஊற்ற எட்டு பூ பூத்ததாம்
ஒன்பது குடம் ஜலம் ஊற்ற ஒன்பது பூ பூத்ததாம்
பத்து குடம் ஜலம் ஊற்ற பத்து பூ பூத்ததாம்

இம்மாதிரி ஒன்று முதல் 10 வரையில் உள்ள எண்களைக் குறித்து வேறு சிலவும் தமிழ் நாட்டில் வழங்குகின்றன. மற்றொன்று அடியில் காண்பிக்கப் பட்டிருப்பது.

குருவிக்குக் கலியாணம்



ஒரு குருவி ஊரை அழைக்க
இரண்டு குருவி மேளம் வாசிக்க
மூன்று குருவி மாக்கோலம் போட
நான்கு குருவி நாற்காலி போட



161804

ஐந்து குருவி சர்க்கரை கொடுக்க
ஆறு குருவி பூவாரி இறைக்க
ஏழு குருவி இலை போட
எட்டு குருவி புட்டு சமைக்க
ஒன்பது குருவி பொங்கல் பரிமாற
பத்து குருவி குதித்துப் பாடக்

குருவிக்குக் " கலியாணம் வைபோகமே

குச்சி வைத்தல்

ஆறு முதல் 10 வரையில்



ஒன்று முதல் 10 வரிசைப்பட எண்ணுதல்

இங்குக் காட்டிய உபகரணங்களைக் கொண்டு ஒன்று முதல் பத்து வரை எண்ணவும் இலக்கங்களைத் தெரிந்து கொள்ளவும் சொல்லிக் கொடுக்கலாம்.







இங்குக் காட்டிய பாடம் மனப்பாடம் செய்யத்தக்கதாகும்.

மேலும்

1 + 9 அல்லது 9 + 1 = 10

2 + 8 அல்லது 8 + 2 = 10

3 + 7 அல்லது 7 + 3 = 10

4 + 6 அல்லது 6 + 4 = 10

5 × 5 = 10 என்பதையும் நன்கு விளக்கலாம்.

மனப்பாடம் செய்யவேண்டிய மற்றெரு விஷயம்

**1 + 1** 2

**2 + 2** 4

**3 + 3** 6

**4 + 4** 8

**5 + 5** 10



ஞாபகம்வை

1 + 1 = 2

2 + 2 = 4

3 + 3 = 6

4 + 4 = 8

5 + 5 = 10

எண்களைப் பிரித்து அறிதல்

உதாரணமாக 8 என்பதை அடியிற் கண்டவாறு பிரிக்கலாம்.

1 + 7 அல்லது 7 + 1 = 8

2 + 6 அல்லது 6 + 2 = 8

3 + 5 அல்லது 5 + 3 = 8

4 + 4 அல்தது = 8

2 + 2 + 2 + 2 = 8

3 + 3 + 2 = 8

* *   * * *
* *
* *   * * *
* *   * *



ரதல் இருபது

அடியிற்கண்ட மணிச்சட்டம் மாதிரி ஒன்று தயார்செய்து 11 முதல் முடிய எண்களையும், எண்களின் பரிமாணம், இலக்கங்கள் இவைகளையும் ல்லிக் கொடுக்கவும்.




இலைகளை உபயோகித்துச் சில பாடங்களைச் சொல்லிக்கொடுத்தல்.



ண்டி ஆட்டம்

குழந்தைகள் பாண்டி ஆடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அந்த ளையாட்டு எவ்வளவு தூரம் கணக்கிற்குச் சம்பந்தம் உள்ளதென்று தரிந்துகொள்ளலாம்.

அடியிற்கண்ட படத்தைக் கவனிக்கவும்.




A. ஒவ்வோர் இடமாகத் தாண்டிச் செல்ல ஒன்று கூட்டுவது ஆகும்.

1, 2, 3, 4, 5, 6, 7

1 + 1 = 2 | 4 + 1 = 5
2 + 1 = 3 | 5 + 1 = 6
3 + 1 = 4 | 6 + 1 = 7

B. ஓர் இடம் விட்டு அடுத்த இடம் போகக் கூட்டுவது ஆகும்.

1· 3· 5· 7· 9
2· 4· 6· 8· 10

1 + 2 = 3   2 + 2 = 4
3 + 2 = 5   4 + 2 = 6
5 + 2 = 7   6 + 2 = 8

நடுவில் இரண்டு இடம்விட்டு அடுத்த இடம் செல்ல மூன்று கூட்டினதிற்குச் சமானம் ஆகும்.

1 * * 4 * * 7 * * 10 * * 13 * * 16
2 * * 5 * * 8 * * 11 * * 14 * * 17

குழந்தைகள் தங்கள் பாதங்களினாலேயே தாமரைப்பூப் போட்டுக் கொள்ளலாம். அதைத் தாண்டுவது வேடிக்கையாகவிருக்கும். அதனுடன் கணக்கையும் தெரிந்து கொள்ளலாம்.

### 20 முதல் நூறுவரையில்

சாதாரணமாய் குழந்தைகள் 20 முதல் நூறுவரையில் எண்களைச் சொல்லவும் எழுதவும் கற்றுக் கொள்ளுகிறார்கள்; எண்ணின் பரிமாணம் எவ்வளவு என்று தெரிந்து கொள்ளச் செய்வது மிக அவசியம். அடியிற் கண்ட உபகரணத்தை மணியினால் செய்து கொள்ளலாம்; இடது பக்கத்துக் கம்பியில் 10, 10 ஆக மணிகளைக் கோத்து இருக்கிறது. வலது பக்கத்தில் மணிகளை ஒன்று ஒன்றாகக் கோத்து இருக்கிறது.



41 காட்டு என்றால் வலது பக்கத்தில் 4 சரம், வலது பக்கத்தில் ஒன்றையும் கட்டிப் பார்க்க வேண்டும்.

சாதாரணமாக 41ல் 4 பத்துக்களும் 1 ஒன்றும் இருக்கின்றன வென்பதை, பாஷைமூலமாகச் சொல்லுவதைக் காட்டிலும் அந்த விஷயத்தை நன்கு அறிந்து கொள்வதற்கு அறிகுறியாக இம்மாதிரிச் செய்கையில் காட்டுவது மிக்க விசேஷம் ஆகும்.



ஒன்று முதல் நூறுவரையில் சில விளையாட்டுக்களும் உபகரணங்களும்,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 99 | 98 | 97 | 96 | 95 | 94 | 93 | 92 | 91 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 80 | 79 | 78 | 77 | 76 | 75 | 74 | 73 | 72 | 71 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 60 | 59 | 58 | 57 | 56 | 55 | 54 | 53 | 52 | 51 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 40 | 39 | 38 | 37 | 36 | 35 | 34 | 33 | 32 | 31 |
| 21 | 22 | 33 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 20 | 19 | 18 | 17 | 16 | 15 | 12 | 13 | 12 | 11 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

வைகுண்ட ஏகாதசி தினம் பொழுதுபோக்க வீட்டிலுள்ளவர்கள் "பரமபத சோபான படம்" அல்லது "மோக்ஷ படம்" என வழங்கும் படத்தை வைத்துக்கொண்டு விளையாடுவார்கள். அன்றைய தினம் அந்தப் படம் விளையாடினால் மோக்ஷம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். மோக்ஷத்தை அடைவது பிறகு ஆகட்டும்; எண் இட வேலையை விளையாட்டாகக் கற்றுக்கொடுக்க அது ஒரு நல்ல சாதனம் ஆகிறது. அந்த விளையாட்டு விளையாட 2, 3, 4 பேர் வேண்டும்; ஒவ்வொருவரும் ஒருவிதமான காய், கட்டை, மணி இவைகளுள் ஒவ்வொன்றைத் தமது அடையாளமாக வைத்துக்கொள்ளவேண்டும். தமது 'காய்களை' நகர்த்துவதில் சோழி குலுக்கிப் போட்டும் சோழி விழும் எண்ணிக்கையை உபயோகப்படுத்த வேண்டும்; நமது கணக்குக்காக அடியிற் கண்ட கணக்கை உபயோகிப்போம்.

| | | | |
|---|---|---|---|
| நான்கும் | மல்லாந்து | விழுந்தால் | நான்கு |
| மூன்று | மல்லாந்து | விழுந்தால் | மூன்று |
| இரண்டு | மல்லாந்து | விழுந்தால் | இரண்டு |
| ஒன்று | மல்லாந்து | விழுந்தால் | ஒன்று |

பரமபத சோபானபடத்தில் ஏணிகளும், பாம்புகளும் காணப்படும்; ஒரு கட்டத்தில் ஏணியிருந்தால் அதன்வழியே காய் ஏறும் ஏணியின் உச்சியிலுள்ள கட்டத்தில் வந்துவிடும். அங்கிருந்து மறு ஆட்டத்திற்குக் கணக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். காய் பாம்பின் தலையுள்ள கட்டம் சென்றதும் அதின் உடம்புவழியாக இறங்கி வாலுள்ள கட்டத்திற்கு வந்துவிடும்; அந்த இடம் முதற்கொண்டுதான் மறு ஆட்டத்திற்குக் கணக்கு. இப்படம் மத சம்பந்தமானது என்று வேறு சிலர் நினைத்தால் இங்குக் காட்டியபடி ஒன்று முதல் நூறு எழுதின ஒரு கட்டத்தை உபயோகிக்கலாம்,

**அதே அப்பியாசம் கொடுக்க வேறு உபகரணங்கள்.**

இங்குக் காட்டிய கூட்டல் அப்பியாசத்தை நன்கு பழக்க இப்படத்தைத் தவிர வேறு சில சாதனங்களைக் கண்டறிவதில் கவனத்தைச் செலுத்தினதில் மற்றும் சில தெரியவந்தன ; அவை பின்வருமாறு :—

1. கட்டம் ஆடுதல்

2. கட்டத்திற்குப் பதிலாக ஒரு கியாலண்டர் காகிதத்தை உபயோகித்தல்.

3. இதே கியாலண்டர் எண்களை வட்டமாக அமைத்துக் கொள்ளுதல். [கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு, பாகம் II இரண்டாம் வகுப்பிற்கு உரியது. பி. ஜி. பால் அண்டு கம்பெனி விலை 0 3 6 : இப்புஸ்தகத்தில் இவ்விளையாட்டுகளைக் காணலாம்].

4. அடியிற் கண்ட இரண்டு உருவங்கள் மாதிரி மெல்லிய பலகையில் அல்லது கெட்டி அட்டையில் எழுதிக் கொள்ளலாம். கியாலண்டர் எண்களையே இங்கு ஒட்டிக் கொள்ள உபயோகித்துக் கொள்ளலாம்.





முடிவுரை.

இங்குக் காட்டியமுறைப்படி கணிதபாடம் சொல்லிக்கொடுக்கக்கணிதப் பயிற்சி ஏற்படுவதில் ஓர் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். இங்குள்ள விளையாட்டுக்களும் உபகரணங்களும் இப் பயிற்சி ஏற்படுவதில் தகுந்த சாதனங்களாய் அமைந்திருக்கின்றன. மேலும் குழந்தைகள் பள்ளிக்கூடம் தவிர வீட்டிலும் வெளியிலும் இவ்விளையாட்டுக்களை விளையாடிக் களிப்பதுமல்லாமல் கணித ஞானத்தையும் வேடிக்கையாக அதிகரித்துக் கொள்ளலாம். இவ்விதத் தேகமனப்பயிற்சி ஒருங்கே அமைக்கப்படுவதே கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

# கல்விப் பயிற்சி

## சில நவீனக் குறிப்புக்கள்

ரேவ் H. A. பாப்லி B. A.

இப்போது உலகிலே கல்விப்பயிற்சியின் மேம்பாடு கையில் நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. எல்லாத் தேசங்களிலும் தலைவர்கள் இதன் உண்மை நன்கு அறிந்து தங்கள் மேனோக்கங்களுக் கேற்றவிதமாய் அதை நடப்பிக்கவேண்டுமென்று மிகுந்த கவலையுடன் வற்புறுத்தி வருகிறார்கள். ஜெர்மானி, இத்தாலியா, ருஷியா, துருக்கி என்னும் தேசங்களின் தலைவர்கள் கல்விப் பயிற்சியின் கருவியால் சிறுவர் யாவரும் ஒரே மனப்பான்மையுடையவர்களாயும் சுவாதீன நிலையை மேம்படுத்தாமல் அரசொற்றுமையைச் சிறப்பித்துக் கீழ்ப்படிந்து நடக்கத்தக்கவர்களாயும் தேசத்தலைவர்களின் கருத்துக்களைத் தங்கள் கருத்துக்களாக ஏற்றுக்கொண்டு தேசவுரிமையில் முற்றும் ஈடுபட்டு வேலைசெய்யத் தக்கவர்களாயும் வளர்ந்துகொள்ளும் பொருட்டே அவர்களைப் பயிற்ற வேண்டுமென்று ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இதற்கென்றே கல்விப்பயிற்சியை அதிகம் மேம்படுத்தி நூதன முறைகளை அனுசரித்துச் சிறந்த வழி வகைகளை ஏற்படுத்திவிடுவதுண்டு. இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஸ்வீடன். சீனா என்னும் தேசங்களிலும் கல்விப்பயிற்சி தேச முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியாம் என்று தெரிந்து அதை எல்லா விஷயத்திலும் சீர்படுத்திச் சிறுவர்க்கேற்ற விதமாய் நடப்பிக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சிறந்த ஏற்பாடுகளை யோசித்து வருகின்றனர்.

இப்படியிருக்க எந்தத்தேசத்திலும் இக்காலத்தில் கல்விப்பயிற்சியின் கருத்துக்களை நிறைவேற்றத் தக்கதாகப் புதிய முறைகளையும் ஏற்பாடுகளையும் தேடிவருவதுண்டு. பல புதுப் பிரயத்தனங்கள் நடந்துவருகின்றன. முன்னமே இத்தாலியா தேசத்தில் அத்தகைய நூதன வழிவகைகள் அநேகம் தோன்றியுள்ளன. பெஸ்தலொத்ஸி மொந்தேசொரி, பஸ்காலி முதலியவர்கள் பிரசித்தம் பெற்றவர்கள். கல்விப்பயிற்சியைக் கட்டுப்படுத்தாமல் அது பற்பல சுவாதீன வழிகளில் செல்ல நடத்தும் தேசங்களில் தற்போது பல நேர்த்தியான பிரயத்தனங்கள் உள்ளன. உயிர் வாழ்க்கையின் சிறப்பை வெளிப்படுத்தி அதின் நயத்தை அதிகப்படுத்தும் பொருட்டு இந்நூதன முறைகளும் பிரயத்தனங்களும் நடப்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது நாம் அறியவேண்டியதாவது நாம் பிறர்க்குக் கல்வி கற்பிக்கமுடியாது என்பதே. குதிரைக்குத் தண்ணீர் காட்டலாம் எனினும் அதைக் குடிக்கக் கட்டாயப்படுத்த முடியாது. சிறுவர்க்குக் கல்வியைக் காண்பிக்கலாம். அதைக் கற்றுக்கொள்ள அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. எப்படியாவது அவர்களுடைய மனத்தில் அதனிடம் பற்று,

இஷ்டம், சித்தம் உண்டாதல் அவசியம். ஆதலால் அறிவைத்தேட வேண்டுமென்ற அவா, சிறுவர் மனத்தில் இருந்தாலொழிய சிறுவர் கல்விகற்க முடியாது. செய்கையிலும் விளையாட்டத்திலும் சிறுவர்க்குப் பற்றுண்டாதல் கூடும். பற்றுள்ளவழியே கல்வி கற்கத் தக்கதாக முயலவேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதுபோல அவா என்னும் காற்றுண்டாகுமிடத்தில் கல்வி என்னும் கதிரைப் பிறப்பிக்கலாம். "கல்வி கற்பது இரண்டு பாகுபாடுகளுடையது. ஒன்று: கற்கிறவன் கற்பனா சக்திகொண்டு தனக்கென்று புதிய நடவடிக்கையை உண்டாக்குதல்; இரண்டு: இப்புதிய நடவடிக்கை தனது இயற்கையில் அமைத்து வைத்தல்." என்றார் கில்பாட்ரிக் பேராசிரியர். ஆதலால் கல்விப்பயிற்சி எது வென்றால் "ஜீவாத்மா இன்னும் உயரிய வழிவகைகளில் விருத்தியடைந்து கொள்ளுமாறு எது தனது சக்திக்கு மேலாக நன்கு யோசித்துத் தீர்மானிக்கத் தக்கதாக அதற்கு உதவிசெய்தலாம்" என்பதே. அப்படியிருத்தலால் சுயேச்சையாய் எடுத்துக்கொண்ட செய்கைகளால் சிறுவர் அவ்வாறாக விருத்தியடையலாம்.

இரண்டாவது: சிறுவர் சமூக வாழ்க்கையில் தக்கவிதமாய் வாழ்ந்து கொண்டு சமூக வாழ்க்கையின் வளர்ச்சிக்கென்று உதவி புரியும்பொருட்டுக் கல்விப் பயிற்சி நடைபெறவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்; நிபுணர்கள் சமூகவாழ்க்கைத் திறம் எல்லாருக்கும் இக்காலத்தில் இன்றியமையாத திறமை, என்பது தெளிவு.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்ற திருவள்ளுவர் மொழியே பல சான்றுகளால் விளங்கிய உண்மையாம். ஆதலால் நாட்டு நடபடிகள் சிறுவர் கல்விப் பயிற்சிக்கு மிகவும் சிறப்புள்ளன. சேர்ந்து விளையாடலும் சேர்ந்து செய்கை செய்தலும் முதலியவை கல்விப் பயிற்சியின் பகுதிகள் என்றறிதல் வேண்டும்.

மூன்றாவது: மனதில் தோன்றாத உள்ளான ஆசைகளும் இயக்கங்களும் அதிக முக்கியம் என்பது அறிதலாயிற்று. அநேக கெட்ட நடவடிக்கைகளுக்கும் வீண் பயங்களுக்கும் தோன்றாத ஜீவியத்தில் ஒளித்துக்கொண்டிருக்கிற பழைய அனுபவங்கள் காரணங்களாயிருக்கலாம் என்றும், இன்னும் சில சமயத்தில் உள்ளத்திலுண்டான பிரிவு கல்விப் பயிற்சியில் முன்வராமைக்குக் காரணமாகலாம் என்றும் கண்டு பிடிக்கப்பட்டது. ஆதலால் உள்ளான்மா வாராய்ச்சியாளர் தங்களுக்குத் தெரிந்த வழியாகச் சிறுவர் இரகசிய உணர்ச்சியில் ஒளித்துக் கிடக்கும் காரியங்களை வெளியில் கொண்டு வருகிறார்கள். லண்டன் நகரின் பிரதம பாடசாலைகளில் இத்தகைய சிறுவர்கள் இருப்பாரானால் உள்ளான்மா வாராய்ச்சியாளரிடம் அவர்களை அனுப்புவார்கள்.



நான்காவது இங்கிலாந்தில் தேகப்பயிற்சியை அதிகம் சிறப்பித்து வற்புறுத்துகிறார்கள். தேகப்பயிற்சி யின்றிக் கல்விப்பயிற்சி சரியாகக் கிரியை செய்ய முடியாது என்று தெரிந்து எல்லாப் பாடசாலைகளிலும் தேகப்பயிற்சிக்குத் தக்க ஏற்பாடுகளை நடப்பிக்கிறார்கள். அநேக பாடசாலைகளில் சிறு பிள்ளைகளுக்கு தினந்தோறும் ஒரு படி நல்ல பாலைக் கொடுக்கிறதுமுண்டு. பெரும்பான்மையோர் ஒவ்வோர் அணா கொடுத்துக்கொண்டிருக்க அதிக ஏழைகளுக்குப் பணமின்றியே கிடைக்கும். ஒவ்வொரு பாடசாலையிலும் தேகபரிசோதனை இடை இடையே நடைபெறும். குறைவோ, பலவீனமோ வியாதியோ நேர்ந்தால் பெற்றோர்க்குத் தெரிவித்து அதைச் சரிப்படுத்தத் தக்க ஏற்பாடுகளை நடப்பிக்கிறார்கள்.

ஐந்தாவது (11-ம் வயதான காலத்தில்) கற்பவர்களிலே விசேஷித்த பிரிவு ஏற்படுகிறது. அதுவரை ஜூனியர் அதாவது பிரதம பாடசாலைகளில் யாவரும் கற்றுக்கொள்ளுகிறார்கள். 11-ம் வயதில் சிலர் உயரிய பாடசாலைகளுக்குப் போய்ப் படிக்கிறார்கள். வேறு சிலர் மத்திய பாடசாலைகளுக்குப் போய் 16-ம் வயதுவரை பொதுக் கல்வியுடன் கைத்தொழில்களையோ வர்த்தக விஷயங்களையோ கற்றுக்கொள்ளுகிறார்கள். மற்றவர் 16-ம் வயதுவரை சீனியர் அதாவது உயர் பிரதம பாடசாலைகளில் சாதாரண படிப்பு கற்றுக்கொள்ளுகிறார்கள். மத்திய பாடசாலைகளுக்குப் போகிறவர்களை விசேஷித்த பரீட்சையினால் தேர்ந்தெடுத்து ஸ்காலர்ஷிப்பு பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அவர்களில் பெரும் பான்மையோர் படித்துத் தேர்ந்த பின்பு ஏதாவதொரு வேலை செய்யச் சமயம் பெற்றுக்கொள்வார்கள். ஒவ்வொரு பாடசாலைக்கும் அல்லது இரண்டு மூன்று பாடசாலைகளுக்கும் இதற்கென்றே ஒரு கமிட்டி ஏற்படுத்தலாயிற்று. தங்கள் சொந்த பிரயத்தனத்தினால் வேலை கிடைக்காத பையன்களும் பெண்களும் இக்கமிட்டியின் உதவியினால் அநேகமாய் வேலை பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

இத்தகைய நவீன ஏற்பாடுகளை இந்தியாவிலுள்ள நாம் கவனித்து இத்தேசத்திற்கேற்ற விதமாய் அவைகளைக் கொண்டுவரவேண்டும் என்பது என் துணிபு. நமது தேசத்தில் இன்னும் கல்விப் பயிற்சி ஒழுங்குகள் அநேக விஷயங்களில் சீர்திருத்தம் பெறவேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை. பாலர் கல்விக்கு மிகவும் சிறப்புள்ள ஏற்பாடுகள் அவசியம் என்றறிந்து பல தேசக் காரியங்களைக் கவனித்து நமது தேசத்தில் தகுதியுள்ளவற்றைக் கொண்டு வருவது உத்தமம்.

# கதைப் பாட்டு

"போல்லா நட்பு அல்லற் படுத்தும்"

(நொண்டிச் சிந்து)

( **By R. Venkatachari**, *R. C. Training School, Trichy.* )

1. என்ன ருமைச் சிறுவர்களே—நான்
எடுத்துச் சொல்வே னோர்கதையை.

2. கவன மாகவே நீங்களுமே—இதை
கருத்தாய்க் கேட்டால் மிகநலமே.

3. ஒருநா ளோர்நெற் களந்தனிலே—பல
கருநிற மான காக்கைகள்தாம்

4. நன்றாய் விளைந்த நெல்தன்னை—மிகவும்
நாசஞ் செய்யத் தொடங்கினவே.

5. அப்போ தந்தச் சமயத்தில்—ஓர்
அழகிய றக்கைக் கிளிதானும்

6. காக்கைக ளோடே சேர்ந்துமே—விரைவாய்
களத்து நெல்லைக் கொத்திற்றே.

7. பக்ஷிகள் செய்யும் பாதகத்தை—அங்கு
பார்த்த ஓர்குடி யானவனும்

8. 'பட்டென்' றோர்துப் பாக்கியாலே—குறியாய்
சுட்டு விரட்டினான் பக்ஷிகளை.

9. எல்லாக் காக்கையும் ஓடினவே—அந்தோ ;
எளியகிளி காயம் பட்டதுவே.

10. சுருண்டு வீழ்ந்த கிளிதன்னைச்—சில
சுற்றி யிருந்த மனிதர்கள்

11. இரக்கமுற் றேயெடுத் தேகியதை—நன்கு
ஏற்ற சிகிச்சையைச் செய்தனரே.

12. குணம டைந்த கிளிதானும்—பிறகு
கொன்றாலும் காக்கையோடு போவதில்லை.

13. இந்தக் கதையினால் நீங்களுமே—நீதி
அறிய வேண்டிய தென்னவெனில்

14. பொல்லா நட்பு எந்நாளும்
அல்லற் படுத்தும் என்பதுவே.

# ஆரம்ப ஆசிரியரும் மனோதத்துவ சாஸ்திரமும்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முதல் முதல் பாடசாலைக்கு அனுப்பும்போது அப் பிள்ளைகளுக்குப் படிக்க வேண்டுமென்ற ஆசை மிகவும் அதிகமாக இருப்பதை நாம் கவனிக்கிறோம். ஐந்து வயதாகு முன்னே குழந்தைகள் தங்கள் சகோதரன் அல்லது சகோதரியுடைய பாட புத்தகங்களை எடுத்துப் பக்கங்களைத் திருப்பிக்கொண்டு படங்களைக் கண்டு ஆனந்திப்பதை நீங்கள் பார்க்கலாம். சில குழந்தைகள் சிலேட்டு அல்லது நோட்டுப் புத்தகத்தில் வெகு சந்தோஷத்துடன் சுழித்துச் சுழித்து எழுதுவதை நீங்கள் பார்க்கக்கூடும். அச்சமயம் அவர்களைத் தொந்தரவு செய்தால் அவர்கள் மிகவும் மனவருத்தம் கொண்டு அழுவார்கள். இன்னும் சில குழந்தைகள் அலங்கரித்துக்கொண்டு தங்கள் சிநேகிதர் அல்லது சகோதர சகோதரிகளுடன் வெகு சீக்கிரமாகவே பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டு விடுவார்கள். பள்ளிக்கூடத்திற்குச் செல்லவும், படிக்கவும் எழுதவும் இவ்வளவு அவாக் கொண்ட குழந்தைகள் பெற்றோர்களால் பாடசாலைக்கு அனுப்பப்பட்ட இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குப் பின் படிப்பையும் தங்கள் பாடசாலைகளையும் எவ்விதம் நேசிக்கிறார்கள் என்பதைச் சற்று கவனிப்போம்.

சீக்கிரமாகவே பாடசாலைக்குப் புறப்பட்ட குழந்தை பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட சில நாட்களுக்குப்பின் சட்டாம்பிள்ளை அல்லது உபாத்தியாயரால் நிர்ப்பந்தப்படுத்திப் பாடசாலைக்கு அழைத்துக்கொண்டு வரப்படுகிறது. நான்கு அல்லது ஐந்து பெரிய பிள்ளைகள் அக்குழந்தையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பாடசாலைக்குக் கட்டாயப்படுத்திக் கூட்டிக்கொண்டு போவதும் உண்டு. வீட்டில் குழந்தை செய்யும் தொந்தரவைப் பொறுக்க முடியாத பெற்றோர் எவ்வளவோ கட்டாயப்படுத்தியும் பாடசாலைக்குப் போகமாட்டேன் என்னும் பையனை அடித்துப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவந்து விடுவதையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். அப்போது பையன் தெருவழியே அழுதுகொண்டே வருவான். பள்ளிக்கூடத்திற்குள் சென்றதும் பெற்றோர் உபாத்தியாயரிடம் பிள்ளையைக் கண்டிக்க வேண்டுமென்றும், அடிக்கடி விளையாடவாவது வீட்டிற்குச் செல்லவிடவாவது கூடாதென்றும் தெரிவித்துக் கொள்வார்கள். பையன் மனம் அச்சமயம் எவ்விதம் பதை பதைக்கும் என்று இங்கு நான் எடுத்துச் சொல்லவேண்டியது அவசியம் இல்லை. அன்பில்லாத ஆசிரியரிடம் இவ்விதம் ஒப்புவிக்கப்படும் பாலன் அப்போது மிகவும் நடுநடுங்குவான். இன்னும் சில சமயங்களில் பிள்ளை

களுக்கு விலங்கிட்டுக் குற்றவாளியைப் போலீஸ் அதிகாரிகள் நியாயஸ்தலத்திற்குக் கொண்டு போவதுபோல அழைத்துக்கொண்டு செல்லும் காட்சி அடிக்கடி கிராமங்களில் காணப்படும். இவற்றிற்கு எல்லாம் காரணங்கள் யாவை என்பதை உபாத்தியாயராகிய நாம் அவசியம் கண்டறிய வேண்டும்.

பிள்ளைகள் தாங்கள் படிக்கும் பாடங்களின் மேலும் தங்கள் பாடசாலைகளின் மேலும் வெகு சீக்கிரம் வெறுப்படையும் காரணங்களை நாம் கண்டறிய வேண்டுமானால், கிராமப் பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர் பிள்ளைகளுக்கு எவ்விதம் கல்வி கற்பிக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். பள்ளிக்கூட நேரங்களில் பிள்ளைகளைச் சற்று நேரம்கூட உபாத்தியாயர்கள் விளையாட விடுவதில்லை. அவர்களை ஓயாமல் படித்துக்கொண்டும் முறை சொல்லிக்கொண்டும் இருக்குமாறு செய்கிறார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? இன்னும் சில ஆசிரியர்கள் குழந்தைகளை ஓயாமல் அதட்டிக்கொண்டும் அடித்துக்கொண்டும் இருப்பார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் பிள்ளைகள் புலியைக் கண்ட பசுவைப்போல நடு நடுங்குவார்கள். இது பற்றியே குழந்தைகள் வெகு சீக்கிரம் பள்ளிக்கூடத்தின் மேல் வெறுப்படைகிறார்கள். இன்னும் சில ஆசிரியர் கைகளைக் கட்டிக்கொண்டும், வாயைப் பொத்திக்கொண்டும் பிள்ளைகளை இப்படியாவது அப்படியாவது அசையாமலும் பேசாமலும் இருக்கும்படி நிர்ப்பந்தம் செய்வார்கள். யாராவது ஒரு பையன் குசுகுசு வென்று பேசினாலும் உடனே அவனுக்கு உபாத்தியாயர் கடுமையான தண்டனையை விதிப்பார்.

பிள்ளைகளைப் பேசாமல் இருக்கும்படி செய்வதாவது, அவர்களுக்குப் பாடங் கற்றுக்கொடுப்பதாவதுதான் தங்கள் கடமை என்று ஆரம்ப ஆசிரியர் கருதுகிறார்களே தவிரப் பிள்ளைகளைப்பற்றிக் கொஞ்சம்கூட அவர்கள் கவனிக்கிறதில்லை. பிள்ளைகளின் தேகவளர்ச்சி, மனோவளர்ச்சி அவர்களின் இயற்கைத் தன்மைகள் முதலியவற்றை யெல்லாம் ஆரம்ப ஆசிரியர் அவசியம் கவனிக்க வேண்டும். மனோதத்துவ சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து பிள்ளைகளின் தன்மைகளைப்பற்றிய அநேக உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஆரம்ப ஆசிரியர் நன்கறிய வேண்டியது மிகவும் அவசியம். பிள்ளைகளின் இயற்கைத் தன்மைகளை நல்ல வழிகளில் உபயோகித்துப் பிள்ளைகளின் தேகவளர்ச்சி, அறிவு வளர்ச்சி முதலியவற்றிற்குப் பிரயோஜனமான முறைகளைக் கையாடிப் பிள்ளைகளின் முன்னேற்றத்தைச் சித்தி பெறச் செய்வது ஆரம்ப ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.

குழந்தைகளுக்கு முதல் முதல் கற்பிக்கும் தொழிலே மிகவும் பிரயாசையுடன் கூடினதும் மிகவும் உத்தரவாதமானதும் என்று கல்வி சம்பந்தமான ஆராய்ச்சி செய்தோர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலும் போதனாமுறைப் பயிற்சி பெறாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்த உண்மையைத் தலைமை உபாத்தியாயர்களும் பள்ளிக்கூடங்களை நடத்தும் மானேஜர்களும் உணர்வா



ராகில், போதனாமுறை விஷயங்களை நன்கறிந்த உபாத்தியாயர்களையே ஆரம்ப வகுப்புகளுக்கு ஆசிரியராக நியமிப்பார்கள் என்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. நமது இராஜதானியிலுள்ள ஆரம்பப் பாடசாலைகள் அங்குப் படிக்கும் சுமார் ஐந்து வயதுள்ள பாலர்களுக்குத் தக்க வழிகளில் கல்விப் பயிற்சி கொடுக்குமாறு அமைக்கப்பட வில்லை யென்றும், தக்க உபாத்தியாயர்களைப் பெற்றிருக்க வில்லை யென்றும் நமது கல்வி யிலாக்காத் தலைவர்களும் ஸ்டேதம் துரையவர்கள் நன்கு அபிப்பிராயப்படுவதை நாம் பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொள்கிறோம். அவரது அபிப்பிராயப்படியே ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்றுக் கொடுக்கப்படும் முறை முற்றிலும் மாறுதலடைய வேண்டும். அப்பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொடுக்கச் செல்லும் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் போதனா முறைப் பயிற்சியிலும் மாறுதல் ஏற்பட வேண்டும். மனோதத்துவ சாஸ்திரிகள் குழந்தைகளின் தன்மைகளைப்பற்றி எடுத்துக் காட்டியுள்ள உண்மைகளை எல்லாம் ஆரம்ப ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கிண்டர் கார்டன் வகுப்புக்களில் நவீன முறைகளைக்கொண்டு தற்காலத்திற்கேற்ப கல்விப் பயிற்சி கொடுக்கும் வகைகளை எல்லாம் ஆரம்ப ஆசிரியர்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

# சித்திரா விசித்திரம் 2.

அ. ஸ்ரீனிவாஸ ராகவன்

மாவுக் கோலங்களும், பொட்டுக் கோலங்களும் பல நாட்களுக்கு முன்பு ஏற்பட்டவை. ஸ்திரீகள்மட்டுமே அவற்றை அனுசரித்து வருகின்றனர். இக் கோலங்களை வட இந்தியர் மிகவும் பாராட்டுகின்றனர். இரு பக்க ஒற்றுமையின் அழகும், கோடுகளின் ஒழுங்கும் ‘ அட்வான்ஸ் ’ ஆண்களையும் பிரமிக்கச் செய்யும். ஆண்களுக்கு மேற்படி கோலங்கள் வராதென்பதில்லை. பொருந்தி வேலைசெய்யமாட்டார்கள். அப்பியசித்தால் எளிதில் வரக்கூடியதே. அரிசியை அரைத்து நீர்க்கோலமாகவும், நீர்விடாது அரைத்த வறண்ட மாவைக் கொண்டும் இடப்படுகிறது. ஆனால் இடித்த மாவு வெண்மையாயிருக்கும். பலநிறச் சாயங்களில் மாவை ஊறவைத்து உலர்த்தி, வர்ணக் கோலமாகவும் இடலாம். இது வெகு அழகாயிருக்கும். ரத்தினக் கம்பளங்களில் வரையப்பட்ட சித்திரங்கள்போல் காணப்படும்.

தென்னிந்தியாவில் வைதிகக் காரியங்களுக்குத் தாமரைப்பூக் கோலங்களையே உபயோகிக்கிறார்கள். வீதிகளில் சுவாமி வரும்போதும், பண்டிகைக் காலங்களிலும் தாமரைப்பூக் கோலத்தையே சிறப்பாக இட்டுவந்தார்கள். அழகுக்கல்ல. அர்த்தம் உண்டு. பல திக்குகளுக்கும் பிரசன்ன தேவதைகள் உண்டு என்பது நமது கொள்கை. ஒவ்வொரு திக்குக்கும் கோலம் வரையும்போது, அந்தத் திசைக்குரிய தேவதைக்குப் பூஜை செய்து மந்திரபூர்வமாக இட்டுவந்தார்கள். சங்கிராந்தி பண்டிகையன்றும் பவித்திர உற்சவம் அல்லது யாக மேடைகளிலும் மந்திரங்கள் ஜெபித்துக்கொண்டே தான் கோலமிடவேண்டும். சாஸ்திர ரீதியாய்க் குங்குமத்தினாலேயே கோலம் போட வேண்டுமென்றிருக்கிறது.




அயனம், மாதம், பக்ஷம், திதி, வாரம், நக்ஷத்திரம் முதலியவற்றிற்குத் தக்கபடியும், அந்தந்தப் பண்டிகைகளின் அர்த்தத்திற்குத் தக்கபடியும் கோலமிட்டு வந்தார்கள். (எந்தப் பெண்பாடசாலையில் இவை கற்பிக்கப்படுகின்றன) குங்குமத்தால் இட வேண்டிய சங்கிராந்திக் கோலத்தின் அர்த்தத்தைப் பாருங்கள் :—

வடக்கு-குபேரன்-செல்வம் தரும்.
வடகிழக்கு ஈசானன்-விரும்பியது கிட்டும்.
கிழக்கு-இந்திரன்-சொர்க்கப்பிராப்தி.
தென்கிழக்கு-அக்னி-பாவம் தொலையும்.



தெற்கு-யமன்-யமபாதை போம்.
தென்மேற்கு-நிருதி-பூதம் பைசாசம் அணுகா.
மேற்கு-வருணன்-ஞானமும் முக்தியுமளிக்கும்.
வடமேற்கு-வாயு-துன்பம் அகலும்.

பக்தியோடு இடும் கோலத்திற்குச் சக்தியும் உண்டு. மாவை எறும்பு தின்றுவிடும் என்ற பயத்தினால் சுண்ணாம்பு கலந்த மணலால் இடுகிறார்கள். இது சாஸ்திர விரோதம். ஒரு தேவதையும் சுண்ணாம்பு தின்னாது. சிறு ஜீவன்களுக்கு ஆகாரமாவதற்கும் அரிசிமா ஏற்பட்டிருக்கலாம். மற்றைய கோலங்கள் சித்திர தந்திரமே தவிர வேறில்லை.

தட்டார், தச்சர் முதலிய தொழிலாளர் அற்புதமாகப் பூவேலை செய்கிறார்கள். எத்தேசத்திலும் எக்காலத்திலும் இப் பூவேலை உண்டு. சித்திரத்தில் அனைவருக்கும் ஆசையுண்டு என்பதற்கு அத்தாக்ஷி, பிட்டாய்களை அலங்கரிப்பது, பழங்களை அடுக்கிவைப்பது, கோயில்களிலும் வீடுகளிலும் பொம்மைகளும் படங்களும் அமைப்பது, இன்னும் இவைபோன்ற சாதாரண விஷயங்களினாலும் அறிந்துகொள்ளலாம்.

பூர்வீகக் கட்டடங்களில் செதுக்கப்பட்ட சித்திரங்களையும், அமைப்புகளையும்கொண்டு, இது ரோம் தேசத்திற்குரியது. இது கல்தச்சர் காலம், இது பௌத்த மத சம்பந்தம், இது ஜெயினரது என்று சிற்ப சாஸ்திரிகள் ஆராய்ந்து அவற்றின் தன்மை, காலம் முதலியவற்றை அறிந்துகொள்ளுகிறார்கள். பாமர ஜனங்கள் அவற்றின் அழகைமாத்திரம் கண்டு களிக்கிறார்கள். பெரிய கட்டடங்களுக்கு நிலப்படம் வரைவதும் அதிகக் கஷ்டமாயிருந்திருக்கவேண்டும். பைசா கோபுரத்துக்கும், தென்னிந்திய கோபுரங்களுக்கும் கோயில்களுக்கும், பிரமிட் கோபுரத்திற்கும் எவர் நிலப்படம் வரைந்தனரோ அறியோம். சித்திரச்சாலை ஏற்படாத காலத்தில் மகத்தான கட்டடங்களைக் கட்டினார்கள். அவையொன்றும் இன்னும் அழியவில்லை. நாலைந்து வருஷங்கள் தாங்குமென்றே தற்கால கட்டடங்கள் கட்டுகிறார்கள். அவ்வளவு உறுதி!

பழைய சிற்ப வேலைக்காரருக்கிருந்த பொறுமையும் சிரத்தையும் தற்காலத்திய தொழிலாளருக்கில்லை. பெரிய கட்டடங்கள் கட்டுபவருமில்லை. கட்டினாலும் சிறந்த வேலைப்பாடுமில்லை. ஆபீசு கட்டடங்களையும் கப்பல்களையும் கட்டிவிடுவார்கள். மதுரை, காஞ்சீபுரம், தஞ்சாவூர்களிலுள்ள ஒரு மண்டபத் தூணைச் செய்ய முடியாது. பழைய சித்திரங்களை காக்ஷிச்சாலையில் சிறப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. நெசவுக்காரர்கூட முன்போல் காசு பட்டுகள் செய்வதில்லை. (காலம் கஷ்டம் சுபிக்ஷமாயிருந்தாலும் தெரியாது.)

இனிப் பாடசாலைகளில் நடைபெறும் சித்திரப்போக்கைக் கவனிப்போம். சிறுவர்களுக்கும், பெற்றோருக்கும், அதிகாரிகளுக்கும் சித்திர பாடம் என்றால் அலக்ஷியம். சித்திரவகுப்பு விசித்திரவகுப்பு-மேளம் தாளம், பஜனை. சித்திர உபாத்தியாயரையும், தமிழ் உபாத்தியாயரையும் கேட்டால் உண்மை தெரியும். ஏன் ?

1. தனிப்பாடமாக ஏற்படுத்தியிருப்பது. 2. கஷ்டமான பாடங்களுக்குப் பிறகு ஓய்வு அடையும் சமயத்தில் ஏற்படுத்தியிருப்பது. ஆனால் இக் குறைகளை நிவர்த்திப்பதும் கடினம். எப்படியோ சித்திரம் வரைவதற்கும் நடுவில் ஓர் அவகாசம் கொடுத்திருக்கிறார்களே, அதே பாக்கியம். பெண் பாடசாலைகளில் இந்தப் பாடத்திற்குக் கொஞ்சம் மதிப்பு இருக்கிறது. அவர்களுக்குக் கோலம் போடத் தெரியவேண்டும். துணிகளில் பூக்கள் போடவேண்டும். மணிகள் கோர்க்கவேண்டும். ஆண்களுக்கோவென்றால் சில வகுப்புவரையிலும்தான் சித்திரப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. மேல்வகுப்பு ஏறும்போது, சித்திர வருமானம் குறைவு என்ற ஞானம் உண்டாகிவிடுகிறது. மேல்வகுப்பில் கட்டாயப் படிப்புமில்லை.

தற்சமயம் தென்னிந்தியப் பாடசாலைகளில் அப்பியசிக்கப்பட்டு வரும் சித்திரங்களில் பிள்ளைகளுக்கு ஊக்கமுமில்லை. சித்திர முறைகளை ஒருவாறு மாற்றினால் இக்குறை நீங்கும் என்று நம்புகிறேன். நேர்க்கோட்டுச் சித்திரம் நான்குமாதம், வளைகோட்டுச் சித்திரம் நான்குமாதம், இவை இரண்டும் சேர்ந்த சித்திரம் நான்குமாதம் ஆக ஒருவருஷம் கோட்டுச் சித்திரங்களில் கழிப்பதைவிடக் கூட்டச் சித்திரங்களைப் பழக்கிவிடலாம். (இது என் அனுபவம்.) திருவிழாக் கூட்டம், கலியாணக் கூட்டம், சேனைகள், கடற்கரை, மந்தைகள் முதலிய சித்திரங்களைப் பிள்ளைகள் உற்சாகமாய் வரைகிறார்கள். வர்ணம் கொடுத்தால் இன்னும் ஆனந்தம். கிறுக்கினாலும் தோஷமில்லை. அழகிய ஒரு கத்தரிக்காய் வரைவதைவிட, கிறுக்கின ஒரு கத்தரிச் செடியில் பல காய்கள் வரைந்தால் நன்றாயிராமற் போகுமா? சித்திரங்களுக்கு ஓர் அர்த்தத்தைக் கற்பித்துக்கொண்டே வரையவேண்டும். இம்முறை இதர மாகாணங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இம்முறையினால் வாயால் சொல்ல முடியாததைக் கையினால் வரைந்து காட்டிவிடலாம்.

உதாரணமாகக் கோயில், ஒரு குளம், அதில் ஒரு நீராழிமண்டபம், அழகான படிகள், தெப்பம் உற்சவம், படி நிறைய ஜனங்கள், பலவர்ண விளக்குகளும் அவற்றின் பிரதிபிம்பங்களும் முதலிய விஷயங்களை ஒரே படத்தில் வரைந்து காட்டினால், அவர்களுக்கு ஒருவித உணர்ச்சி உண்டாகும். மறுநாள் பாருங்கள், நோட்புக்கெல்லாம் தெப்பம், வீடெல்லாம் தெப்பம், பாடசாலைச் சுவரெல்லாம் தெப்பம்.

மேலும் சித்திரம் என்பது அன்றைய பூகோளம், சரித்திரம் முதலிய பாட சம்பந்தமாக இருக்கவேண்டும். பூகோள உபாத்தியாயர் தேசபடம் வரைந்துவரும்படி சொல்லுவதில்லையா? என் அம்மாதிரியே சரித்திரக்காரரும் கோட்டைகளையும் சேனைகளையும் எழுதிவரச் சொல்லக்கூடாது. எல்லாப் பாடங்களிலும் சித்திரம் கலந்துவிடும் என்ற பயமா? யோசித்தால் சித்திரம் கலந்த பாடமே மனத்தில் நன்கு பதியும். மேனாடுகளில் சித்திரத்தைத் தனிப்பாடமாக வைப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆனால் சித்திரம் வரைதலை நிறுத்திவிடவில்லை. ஆகவே, ஒருமுறையில் அசிரத்தை ஏற்படின், புதுமுறையொன்றைக் கையாளுவதால் தவறு ஏற்படாது. எப்படியாவது பூர்வீகத் தென்னிந்திய சித்திரப் பெருமையை மீட்கவேண்டும்.

# நமது தர்மம்

## மானிடஜன்ம விசேஷம்

எனது அருமைச் சகோதர சகோதரிகளே,

மானிட ஜன்மம் ஈசுவர சிருஷ்டியில் மிகவும் உத்கிருஷ்டமானதும் புனிதமானதும் ஆகும். எவ்வளவோ புண்ணியங்களைச் செய்து கிடைத்துள்ள இந்த மானிட ஜன்மத்தில் பகவான் நமக்கு இரண்டு விசேஷ சக்திகளை அளித்திருக்கிறார். ஒன்று பாஷை, இரண்டு பகுத்தறியக்கூடிய சக்தி. இந்த விசேஷ சக்திகளோடு கூடிய நமது வாழ்க்கையின் நோக்கம் ஒன்று உண்டு. அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்ய சில மார்க்கங்களும் உள்ளன. பகவானிடத்தில் மனத்தை இருத்தி யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தமது தர்மத்தைச் செய்து எல்லோருடைய க்ஷேமத்திற்காகவும் பாடுபட்டு அதன் பயனாகத் தான் பிறவிக் கடலை நீந்துவதுதான் நோக்கம். அவ்விதமான மார்க்கங்களில் ஒன்பது வகை இருப்பதாகப் புராணிகர்கள் சொல்லுகிறார்கள். ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம் என்பவைகளே. நமது தர்மமோ படிப்பில்லாதவர்களுக்கு மூலாதார வித்தையைக் கற்றுக்கொடுத்தல். கோயில் கட்டுதல், கிணறு வெட்டுதல்போல அன்னதானம் செய்தல், வைத்தியசாலை கட்டுதல், படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பு சொல்லிவைத்தல் இவைகளும் ஆண்டவனுக்குப் பிரீதியான திருப்பணிகளில் ஒன்றாகும். படிப்பிற்குக் கரையில்லை, எல்லையில்லை, காலமில்லை சதாகாலமும் ஞானம் மேலோங்கிக்கொண்டிருக்க வேண்டும். மேலே சொல்லிய ஒன்பது வகைகளில் நமது தர்மத்தைச் செய்யும்படியான சாதனம் ஆத்மநிவேதனம் என்ற ஒன்பதாவது மார்க்கந்தான் தனது ஆத்மாவை அந்தத் தருமத்தில் செலுத்துவது. அப்படிச் செய்தால்தான் குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிக்க முடியும்.

## நமது லக்ஷியத்தில் காணப்படும் சில சித்திரங்கள்

தேரில் ஏறி யுத்த பூமிக்குவந்து தனது ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டுத் தன் சுதர்மமாகிற யுத்தத்திலிருந்து நழுவி விடும் தறுவாயில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அருஜுனனை நோக்கி, 'உன் சுதர்மத்தைச் செய்; செய்கிற காரியத்தின் பலன் என்னைச் சேர்ந்தது. கவலையை ஒழி; தர்மத்தைச் செய்' என்று சொன்னார்.

இயேசுநாதர் பல குழந்தைகளைத் தன்னிடத்தில் அணைத்துக்கொண்டு "எனது குழந்தைகளை என்னிடம் சேர்ப்பியுங்கள். அவர்களிடையே மோக்ஷ சாம்ராஜ்யம் உளது" என்றார். நான் நேரில்கண்ட மற்றொரு காட்சி:—திருச்சி மலைக்கோட்டை ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பகவான் தாயுமானேசுவருடைய இரத உற்சவத்தைக் கண்டேன். அது என் மனத்தை விட்டு நீங்காத தோற்றம். பல பேர் அத்தேரை இழுத்தனர். இழுப்பதில் ஊக்கமும் உற்

சாகமும் கொண்டனர். பகவானை நோக்கிப் பலவிதமாகத் தோத்திரம் செய்தனர். தேர் விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.




அதைப் பார்த்ததும் என் மனத்தில் வேறொரு சித்திரத் தேர் உதயமாயிற்று. அச் சித்திரத் தேர் இதுவே. இத்தேரோ குழந்தையின் கல்வி மகிமையும் நமது தர்மத்தின் நோக்கம், கருத்து, மார்க்கம் முதலியவற்றை விளக்குவது. இத்தேரில் வீற்றிருப்பது குழந்தை. "குழந்தையே தெய்வம்" என்று நமது நாட்டில் பழமொழி வழங்குகிறதல்லவா? இத்தேருக்குத் தேனினும் இனிமை வாய்ந்த அன்பு என்பதே அச்சு. ஊக்கம், உற்சாகம் சிரத்தை என்பதே உலுக்குமரம். இதன் உன்னத நிலைமையிலுள்ள கொடியில் எழுதியிருக்கும் "குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம்" என்பதே நமது மூல மந்திரம்; இக்கல்வித் தேரை இழுக்கக்கூடாத காலத்தில் "மஹா பிரபுவே! நான் ஓர் ஏழை; எல்லோராலும் உத்தமமாகக் கொண்டாடப்படும் உபாத்திமைத் தொழிலை ஏற்றுக்கொண்டேன். என்னிடத்தில் அனேக குற்றங் குறைகள் உள்ளன. எனது குற்றங் குறைகளைப் போக்கி ஞான ஒளி தந்து நான் எடுத்துக்கொண்ட கைங்கரியத்தில் உண்மையாக உழைக்கவும், குழந்தைகளின் மனத்தைக் கவர்ந்து அவர்களது வாழ்வை மேன்மைப்படுத்தவும் எனக்குப் போதுமான தேகபலம் மனோபலம் என்பன இரண்டும் தந்து காத்தருளவேண்டும்" என்பதே எனது தாழ்ந்த பிரார்த்தனை.

## தர்மத்திற்குப் பங்கம் வராமல் காப்பது கடன்.

முன்னம் உபாத்திமைத் தொழிலைச் செய்தவர்கள் தகுந்த அறிவாளிகள், யோக்கியதை யுள்ளவர்கள், தகுந்த நிலைமையில் இருந்தவர்கள். அதே நிலைமையை நாமும் அடையவேண்டும். ஒரு சேவகன் யஜமானன் சொற்படி நடப்பதே அவனது தருமம். ஒரு தோட்டக்காரன் தோட்டத்தில் செடிகளை வைத்துப் பயிராக்கி அவற்றைக் காப்பாற்றி அவற்றின் அழகைப் பார்த்துக் களிப்பதே அவனது கடன். நியாயாதிபதி இருதரப்பாரின் வழக்குகளைக் கேட்டுச் சரியான தீர்ப்புகொடுப்பதே அவரது தர்மம். அதேமாதிரி வைத்தியர் தமதுநோயாளிக்கு ஏற்ற ஔஷதங்களை அளித்துப் பத்தியமாகச் சாப்பிடச் சொல்லி வியாதியைப் போக்குவது அவரது சிறந்த தர்மம். அம்மாதிரி



நாமும் நமது தர்மம் ஓங்கும்படி செய்வதே நமது காரியமாகும். நமது தர்மம் தவறிவிடும்படி நாம் செய்துகொண்டாலும் அப்படித் தவறிவிடும்படி நேர்ந்தாலும் நாம் பாபத்திற்கு ஆளாகிவிடுவமோ என்று பயம் உண்டாகிறது.

## குழந்தையைக் குருவாகக் கொண்டு ஆத்ம சக்தியை வளர்ப்போம்.

நிஷ்களங்கமான பச்சைக் குழந்தையின் முகம் அன்பினால் மலர்கிறது. அதன் பரந்த முகம் நமது கவலையை அறவே ஒழிக்கிறது. சூரியனைக் கண்ட தாமரைபோல் நமது முகம் மலர்கிறது. அன்பு அன்பை இழுக்கிறது. ஆகவே அன்புடைய மனதே ஒரு காரியத்தில் ஈடுபடவேண்டும். அன்பிலாதான் இட்ட அமுது உடம்பிற்கு ஒவ்வாது. குழந்தைகளுக்குக் குருவாகிற நமக்கு அக் குழந்தைகளே சிறந்த குருவாகவும் இருக்கிறார்கள். பச்சைக் குழந்தை தனது ஆத்ம சக்தியை வெளிப்படுத்துகிறது. அதற்கு ஓர் ஆர்வம் உண்டாகிறது.

சாதாரணமாய்ப் படுத்திருக்கிற குழந்தைக்குப் புறப்படுக்கிறது. மார்பினால் இழுத்து இழுத்துச் செல்லுகிறது, தவழ்கிறது, உட்காருகிறது, நிற்கிறது, நடக்கப் பிரயத்தனப்படுகிறது. இம்மாதிரிப் பிறர் சொல்லாமலே அது தனது ஆத்ம சக்தியை விளக்குகிறது. இது ஈசுவர சிருஷ்டியின் விந்தை. குருவின் உதவி இல்லாமலே இவைகள் நடைபெறுகின்றன. மற்றும் ஓர் உதாரணம் சில சொற்களைக் காதால் கேட்கிறது. திரும்பத் திரும்பச் சொல்லுகிறது, ஞாபகம் வைத்துக்கொள்ளுகிறது. வேண்டிய சமயத்தில் ஞாபகப்படுத்திக்கொண்டு ஏற்றபிரகாரம் செய்து காட்டுகிறது. "கிருஷ்ணா, ராமா, கோவிந்தா," என்று கைகொட்டச் சொல்லிக்கொடுக்கிறோம். பல தடவை கைகொட்ட ஆசைப்படுகிறது. "கோவிந்தம் போடா கோவிந்தா கோவிந்தா" என்று இரு கைகளைத் தலைக்குமேல் குவித்துக் காட்டுகிறோம். மறுபடி ஒரு சமயத்தில் அக்குழந்தை தானாகவே இவைகளைச் செய்து காட்டுகிறதை நினைபுங்கள். இம்மாதிரி அதன் ஞானம் வளருகிறதைக் காணும் நமக்கு அது ஒரு பாடம் கற்பித்துக் கொடுக்கிறதாகவே நான் எண்ணுகிறேன். 'குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுக்கும் குருவே! என்னுடைய இயற்கை வழியிலிருந்து உமது பாடத்தை எனக்குக் கற்றுக்கொடுக்கும் வழியைத் தெரிந்துகொள்ளும்" என்பதேயாகும். இவ்வாறே நாம் குழந்தைகளின் இயற்கையைக் கவனித்து யோஜிப்போனால் நமது ஆத்ம சக்தி வளரும் என்பதில் ஐயமில்லை. அப்படி வளரும் காலத்தில் நமது மனதில் திடீர் திடீர் எனச் சில ஜோதிகள் உதயமாகும். அஜ்ஜோதிகளே நமக்குக் கவிபுகட்டும் மார்க்கங்களைக் காட்டும். குழந்தைகளின் முகத்தைப் பார்த்து நமது முகம் மலர்வதே மோகம். அவர்களுடன் கூடி விளையாடுவதே போகம். அவர்களுக்குக் கல்வி சொல்லுவதே யாகம். அவற்றைச் குறித்து சிந்திப்பதே யோகம் என்று யான் அடிக்கடி எண்ணுவதுண்டு. உண்மையாகக் கடமையைச் செய்வதிலேயே கடவுள் இருக்கிறார் என்பதும் உண்மையே. கடவுளுக்குப் பிரீதியான கடமையைச் செய்வதில் நாம் ஒவ்வொருவரும் அவரது கருவியாவோம். அக்

கருவி சரியாக வேலை செய்யும்வரையில் கடவுளுக்குப் பிரீதியே. நமது கருமத்திலேயே கண்ணிருக்குமானால் எந்த இடையூறும் நேராது. அப்படி நேரினும் அது எளிதில் விலகிவிடும். ஏனெனில் நமது கருத்து நமது கடமையிலேயே ஊன்றியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட மன நிலைமை வரின் அதைவிட வேறு பேறு இல்லை. எல்லாம் ஈசுவரனுக்கு அர்ப்பணம் என்ற உண்மை விளங்கும். எவர் தமது சுதர்மத்திலேயே நின்று களிக்கிறாரோ அவர் சித்தி அடைகிறார் என்பது பகவானின் வாக்கியம்.

## உள்ளும் புறமும்.

எல்லாக் குழந்தைகளும் நல்லவர்களாகவே பிறக்கிறார்கள் என்று பலர் சொல்லுகின்றனர். ஆயினும் இரத்த ஊற்று, வமிச பரம்பரை, பஞ்ச இந்திரியங்களை உபயோகித்து ஞானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதற்குத் தக்க இட அமைப்பு, இதைக் கிரகித்துக்கொள்ள வேண்டியதற் கேற்றபடி குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட அவகாசம், திரும்பத் திரும்பச் செய்வதில் வழக்கம், திருத்தமாகச் செய்வதில் கொடுக்கப்பட்ட பயிற்சி இவைகளை ஒட்டிக் கல்வி மேம்பாடு அடைகிறது.

ஓர் உதாரணம் எடுத்துக்கொள்வோம். குழந்தையின் கவனத்தை இழுக்க அல்லது மாற்ற நாம் ஒரு பொய் சொல்லுகிறோம். ஒருபொய் சொல்லி ஒன்றை மறைக்க அது நமது மாயையே அறிந்துகொண்டு ஒன்றுக்குப் பத்து சொல்ல ஆரம்பித்து அந்த மாயையில் நன்றாக ஊன்றி விடுகிறது. ஒரு பொறி பறக்க ஊரெல்லாம் பொறி. மற்றொன்று; வார்த்தைகளுக்கும் அவைக்கு ஏற்ற அர்த்தங்களுக்கும் சம்பந்தம் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. எல்லாரும் உண்மையைச் சொல்லிவிட முடிகிறதா? ஓர் இரகஸிய மான விஷயமாயினும் அது பலபேருக்குப் பல தடவை "இரகஸியமாகவே" சொல்லப்பட்டு வெளிவந்து விடுகிறது. "நாளைக்கு நாளைக்கு" என்று எத்தனையோ பல "நாளைக்கு" வந்து போய்விடுகின்றன. ஆயினும் மனத்தில் ஒரு சமாதானமும் புலப்படுகிறது. இரவு பகல் மாறி மாறி வருகிறதுபோல இவை இப்படித்தான் இருக்கும். முதிர்ந்த குணத்தினால்தான் இவற்றை வெல்லவேண்டும். அதற்கு நமது ஆத்ம சக்தி அதிகரித்து வரவேண்டும்.

## கொடுப்பதிலேயே கண்ணும் கருத்தும் இருக்கவேண்டும்

கொடுப்பதற்கு நம்மிடம் பணம் காசு இல்லையே. மகா ஏழைகளாயிற்றே என்றால் கொடுக்கக்கூடியவை தேகம், மனது, ஞானம், நேரம் இவைகளாகும். கொடுத்துக் குன்றிவிடுமோ என்றால் குன்றாது. பெருகிக் கொண்டே வரும். நமக்கு ஏற்பட்ட பொறுப்பினாலும், குழந்தைகளினுடைய நெருங்கிய பழக்கத்தினாலும், பெற்றோர்களின் கூட்டுறவினாலும் நாம் பெருத்த அனுபவங்களைத் திரட்ட முடிகிறது. அதனால் பெருத்த பொக்கிஷத்தைத் தேட முடியும். அந்த அனுபவங்கள் நமக்கும் நாட்டிற்கும் இன்றியமையாதவை. நமது முன்னோர்கள் கல்வித் துறையில் நமக்குப் பெரு நிதிகள் தேடி வைத்திருக்கின்றனர். அவற்றை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். நூற்றில் 9, 10 பேர் படித்தவர்கள் என்று நாம் கேட்டு வருகிறோம். "எழுத்து அறி



வித்தவன் இறைவனாகும்" என்கிறபடி நமது முயற்சியால் எழுத்து அறிவு இல்லாதவர்களுக்கு எழுத்து வாசனை உண்டு பண்ணுவதே நமது பொறுப்பு. அதுவே நம்மால் செய்யக்கூடிய தாழ்ந்த தேச சேவை. இதுதான் நமது தொழில் முறைக்கும் ஏற்றதாகும். கட்டின வீட்டிற்குப் பழுது சொல்லுவதைவிட எப்படி இதைச் சீர்படுத்தலாம் என்று ஆராய்ந்து அறிவதே சரி என்பதுபோல நமது முறைகளைக் காலபேத இயல்பு, குழந்தைகளின் சௌகரியங்களுக்குத் தகுந்தபடி மாற்றி அமைப்பதில் கண்ணும் கருத்தும் வேண்டும். இந்த விஷயங்களைச் சேர்ந்த மனதிற்குப்பிடித்த ஏதாவது சிலவற்றில் நமது முழுமனதைச் செலவிடுவோமாக. அது நமக்குப் பெருத்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

## நல்ல காலம் வந்தே தீரும். சேவையும் தியாகமும் அவசியம்

போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து. இந்த மருந்து நம்மிடத்தில் ஏதேஷ்டமாக இருக்கிறது. நம்மைப்பற்றிப் பல பிரபுக்கள், அதிகாரிகள் அனுதாபம் காட்டுகின்றனர். அவர்களது லக்ஷியம் கைகூடக் காலம் வரவில்லை. பருவத்தால் அன்றிப் பழா அல்லவா. மரம் வைத்தவன் தான் அனுபவிப்பதற்காக அல்லாமல் தனது சந்ததியார்களை அல்லவோ முக்கியமாகக் கருத நேரிடுகிறது. நமக்கு இல்லாவிட்டாலும் நமது சந்ததி உபாத்தியாயர்களும் தேசமக்களும் லாபத்தை அடையவேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம். ஒரு மஹான் "கடவுள்தான் உன் யோக க்ஷேமத்தை யான் காப்பேன் என்று சொல்லியிருக்கிறாரே" என்பதைப் பூர்ணமாக நம்பி ஒரு நாள் எங்கேயோ ஓரிடத்தில் உட்கார்ந்து விட்டாராம். சற்று நேரம் கழித்து யாரோ ஒருவர் வந்து அந்த மஹானுக்குப் பிக்ஷையிட்டாராம். ஆகவே நமது சேவையிலும் தியாகத்திலும் அதிக வைராக்கியம் வேண்டும். மனோராஜ்யமும் ஆகாசக்கோட்டையும நிற்காது, நமது நாட்டில் எவ்வளவோ மகான்கள் பசி, தாகம், களைப்பு, தூக்கம், இவைகளைவிட்டு உழைத்து வருகிறார்கள். குருவிக்கு ஏற்ற கைலாஸம்போல் நாம் குழந்தைகளின் இராஜ்யத்தில் சற்றே தொண்டு செய்து வருகிறோம்." நம்மால் சாதிக்கக் கூடியது வெகு சொல்பமே. வாழ்நாள் முழுமையும் தீவிரமாக வேலை செய்து பிறகு அதைப்பற்றி நினைத்துப் பார்த்தால் அது வெகு கொஞ்சமாகவே தோன்றும். பகவான் நமக்குக் கண்களைக் கொடுத்திருக்கிறார். நாம் நம் ஜனங்களுக்கு எழுத்து எண் என்ற இரு கண்களைத் திறக்கப் பாடுபடுகிறோம். நமக்கு ஞானக் கண் திறக்கவேண்டும். பிறகு கருணாநிதியாக பகவான் கருணைக் கண்ணைத் திறப்பார். இது மெய்யல்லவா? ஆகவே "உமது மகிமையே மகிமை! உம்மீது பாரத்தைப்போட்டு எல்லாம் உமக்கு அர்ப்பணம்" என்று சொல்லித் தருமத்தைக் காப்பாற்றி வருவோம். நல்ல காலம் வந்தே தீரும். எல்லா ஜனங்களும் க்ஷேமத்தை அடையவேண்டும். என்பதான ஓர் ஆசி வாக்கியத்தைக் கூறி நிற்கிறேன்.

உங்களது சகோதரர்களில் ஒருவனும்,
குழந்தைகள் படிப்பு அபிவிருத்தியில் ஆசை கொண்டவனுமாகிய,

சைதாப்பேட்டை
31-12-35.

எஸ். ஜகந்நாதன்

# கல்விச் செய்தியும் குறிப்பும்

காஞ்ஞகோத்தான்:—

இவ்வூர் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தின் எட்டாவது ஆண்டுவிழா திருப்பத்தூர் ரேஞ்சு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் கமலத் தியாகராஜ முதலியார் B.A., L.T., அவர்கள் தலைமையின்கீழ்க் கடவுள் வாழ்த்துடன் மாலை 4 மணிக்கு கனம செட்டிநாடு ராஜா அவர்கள் ஆரம்பக் கல்லூரியில் ஆரம்பமாயிற்று. பிறகு சங்க்த்தின் உபதலைவர் ஸ்ரீமான் மாணிக்கம் அய்யர் சங்கத்தின் சார்பாகத் தலைவரவர்களுக்கு ஓர் உவகைப் பத்திரம் வாசித்தளித்தனர். தலைவரவர்கள் முகவுரையில் நாட்டில் கல்வி எவ்வாறு விருத்தியடைய சாதனங்களுண்டு என்பதை விளக்கினர். பிறகு மகாராஜா கல்லூரி ஆங்கில ஆசிரியர் ஸ்ரீமான் கோபால ரத்தினமய்யர் M.A., L.T., அவர்கள் பாலர் கல்வி என்னும் பொருள்பற்றி பேசுகையில், எவ்வாறு நவீன முறைகளில் கல்வித் துறையில் மேல்நாட்டினர் முன்னேற்றமடைந்திருக்கின்றனர் என்றும் அதைப்போல் நமது நாட்டில் ஆசிரியர்கள் கடமை யாது என்ற விஷயத்தைப்பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். மேற்கண்ட சங்கத்தின் உபதலைவரும் கோட்டையூர் இராமனாதபுரம் ஜில்லா போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலையின் தலைமை ஆசிரியருமாகிய ஸ்ரீமான் மாணிக்கம் அய்யர் அவர்கள் கிராமப் புனருத்தாரணம் என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் சமூக சேவையில் எவ்வாறு ஈடுபடவேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபனங்களிலும் கிராமங்களின் முன்னேற்றத்தை எவ்வாறு கருத வேண்டுமென்றும் காருண்ய கவர்ன்மெண்டார் கிராமப் புனருத்தாரண வேலையில் ஈடுபடுவதையும் சிலாகித்துப் பேசியும் ஓர் உபன்யாசம் செய்தார். பிறகு காரைக்குடி முனிசிபல் பாடசாலை ஆசிரியர் திரு கெதாயுதம் அவர்கள் பல மாஜிக் விளையாட்டுகளைக் காட்டினர். பிறகு தலைவரவர்கள் முடிவுரையில் நமது தேச மக்கள் எந்த முறையில் கல்வி பயிலவேண்டுமென்றும் கிராமங்களை எவ்வாறு முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்றும் உயர்ந்த நடையில் நீண்டதோர் உபன்யாசம் நிகழ்த்தினர். பிறகு சங்கத்தின் உபதலைவரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

---

இங்கிலாந்தில் கல்விக் காரிய நிர்வாகசபை சங்கத்தார் மகாநாடு ஒன்று டார்கே என்னுமிடத்தில் சில நாள் முன்பு கூடியது. அப்பொழுது கல்வி இலாகா மந்திரி ரைட் ஆனரபில் ஆலிவர் ஸ்டான்லி பிரபு விஜயம் செய்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கும் திட்டம் ஏற்பட்ட பிறகு 2,600,000 பிள்ளைகளுக்கு இப்பொழுது பால் கொடுக்கப்பட்டு வருகிறது என்றும் இன்னும் சில இடங்களில் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராததினால், இந்த எண் குறைந்திருக்கிறதென்றும் சொன்னர்.

# பத்திராதிபர் குறிப்பு

## ஓர் அரைப் பள்ளிக்கூடங்கள்.

நம் நாட்டில் ஓர் ஆசிரியர் பள்ளிக்கூடங்கள்தான் (Single Teacher School) ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்துக்குத் தடையென்று அநேக பிரமுகர்கள் சொல்கிறார்கள். ஆகவே, கல்வி அதிகாரிகளும் சின்ன ஓர் ஆசிரியர்ப் பள்ளிக்கூடங்களை மூடவோ அல்லது அவைகளில் ஒன்று அல்லது இரண்டு வகுப்புடன் நிற்கவோ முயன்றுவருகிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் கல்வியில் மிக முன்னேற்றமடைந்தது என்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அங்கு 100க்கு 98 பேர் படிப்பாளிகள். அந்நாடுகளில் 1933ம் வருஷம் 1,39,180 பள்ளிக்கூடங்கள் ஓர் அரைப் பள்ளிக்கூடங்களாக (One-room School) இருந்தன. மொத்த பள்ளிக்கூடங்கள் 2,41,428 ஆக 100க்கு 50 பள்ளிக்கூடங்கள் ஓர் அரைப் பள்ளிக்கூடங்களாகவே இருந்தன. ஓர் அரைப் பள்ளிக்கூடங்களும் ஓர் ஆசிரியர் பள்ளிக்கூடங்களும் கல்வி முன்னேற்றத்துக்கு முக்கியமென்று நாம் சொல்லவில்லை. செல்வம் நிறைந்த அமெரிக்கா நாடுகளிலேயே, பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கட்டிடங்கள் கட்டவும், போதுமான ஆசிரியர்களை அமைக்கவும் சாத்தியமில்லாமலிருந்தால், நம் நாட்டில் இருப்பதற்கு கேட்கவும் வேண்டுமோ? ஆஸ்டிரேலியா, மெக்ஸிகோ, முதலிய தேசங்களில் கல்வி பரவச் செய்யும் பொருட்டுப், பள்ளிக்கூடங்களைக் கிராம ஓரங்களில் வைத்ததுமில்லாமல் ஓர் ஆசிரியர் இரண்டு அல்லது மூன்று பள்ளிக்கூடங்களுக்கு முறையே சென்று கற்பித்து வந்தார் என்று சொல்லப்படுகிறது. நாமோ, மேனாட்டு முன்னேற்றக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முயல்கிறோம். அது மிகவும் நல்லதே. ஆனால் அந்நாடுகளைப்போல் கல்வியை ஒரு ராஜீயப் பொறுப்பாகக் கொண்டு பணத்தையும் தாராள மனதுடன் செலவிட முன்வந்தால் நலமாக இருக்கும். அது இல்லாவிடில் திருடன் ராஜவிழி விழிப்பதுபோல் ஆகும்.

## பாலர்களின் சுமை

ஆஸ்திரேலியாவில் நியூ ஸௌத் வேல்ஸ் New south wals மாகாணத்து கல்வி இலாகா மந்திரி தமது அறிக்கையில், மாணவர்கள் எடுத்துச் செல்லும் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் மிகவும் அதிகரித்து விட்டிருக்கிறது என்றும் அதனால் பாலர்களுடைய சுமை அதிகரிக்கிறதென்றும் கண்டிருக்கிறார். அதிக பாரம் எடுத்துச்செல்வதனால் பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் என்று அவர் எண்ணுவதாகவும் ஆசிரியர்கள் தங்களாலியன்ற வரையிலும் பாலர்களின் பாரத்தைக் குறைக்க முயற்சிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரி நம் மாகாணத்தில் ஓர் அறிக்கை விடுவித்தல் நலம்தான். 2, 3 வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளும் 10 அல்லது 12 நோட்புக் வாங்குகிறார்கள். அவர்களுக்கும் சுமார் 10 புத்தகங்களாவது வாங்கவேண்டியிருக்கிறது. தவிர, வர்ணப்பெட்டி, கைவேலைப்பெட்டி என்ற இவைகளும் வேண்டியிருக்கின்றன. முக்கியமாகப் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்லும்பொழுது பார்த்தால் அவர்கள் என்ன பாரம் தாங்குகிறார்கள் என்பது விளங்கும். நியூ ஸௌத் வேல்ஸ் மாகாணத்தில் பள்ளிக்கூடத்திலேயே புத்தகங்கள் முதலியன வைத்திருப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. வீட்டில் படிக்க எடுத்துப்போவது சில புஸ்தகங்களே. அதுவே பாரம் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள். நமது கல்வி அதிகாரிகள் இதைப்பற்றி சிந்திக்காவிடினும் ஆசிரியர்களாவது இளம் பிராயத்தில் குழந்தைகள் அதிக பாரம் தூக்குவதின் கெடுதிகளை அறிந்து, அவர்களின் பாரத்தைக் குறைக்கவேண்டிய ஏற்பாடுகள் [illegible]

161804

ஸ்தாபிக்கப்பட்டது 1888.] [டெலிபோன்: 3693

# ஸீ. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்,

பப்ளிஷர்ஸ்:

27, சின்னதம்பித் தெரு, சென்னை.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | பாலபோதனு ஆசிரியரின் கையேடு<br>K. துரைசாமி ஐயங்கார் | 0 8 0 |
| 2. | இந்து பாக சாஸ்திரம்<br>T. K. ராமச்சந்திர ராவ் | 2 4 0 |
| 3. | இந்துதேச சரித்திரம் பாகங்கள் I—II<br>(முதலிரண்டு பாரங்களுக்குரியது)<br>C. N. ஏகாம்பர முதலியார் | |
| 4. | பாலாதித்யன்<br>A. S. P. Aiyer, I. C. S. | 2 8 0 |
| 5. | அபிதான சிந்தாமணி<br>A. சிங்காரவேலு முதலியார் | 10 0 0 |

## எலிமெண்டரிப் பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| காபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 | 2½ |
| காபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |

### 2-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| காபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 | 3 |
| யற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| காபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| ண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 | 3½ |

### 3-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| காபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 | 4 |
| காபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| யற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| றுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 | 5 |
| னசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 4 |

### 4-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| காபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 | 4½ |
| விக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 | 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 | 4½ |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 | 5 |

### 5-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 | 6 |
| இயற்கை அற்புதங்கள் (3-ஆம் புத்தகம்) | 0 | 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 | 5 |
| விவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 | 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 | 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 | 3 |

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,** புத்தக வியாபாரிகள்,
12, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

---

A GUIDE TO

# ELEMENTARY SCHOOL TEACHERS

By Mrs R. S. SWARNAMBAL, M.A., L.T.
with a foreword by D. S. REDDI, M.A, (*Oxon*)

**English Edn.]** **178 pp. with 45 Illustrations** **[Price Re. 1**

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**
EDUCATIONAL PUBLISHERS,
**Narasingapuram Street —— Mount Road, Madras.**

*N.B.*—**Tamil Edition—in the Press**

ஸ்தாபிக்கப்பட்டது 1888.] [டெலிபோன்: 3693

# ஸீ. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்,

ப ப் ளி ஷ ர் ஸ் :

27, சின்னதம்பித் தெரு, சென்னை.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | பாலபோதனு ஆசிரியரின் கையேடு<br>K. துரைசாமி ஐயங்கார் | 0 8 0 |
| 2. | இந்து பாக சாஸ்திரம்<br>T. K. ராமச்சந்திர ராவ் | 2 4 0 |
| 3. | இந்துதேச சரித்திரம் பாகங்கள் I—II<br>(முதலிரண்டு பாரங்களுக்குரியது)<br>C. N. ஏகாம்பர முதலியார் | |
| 4. | பாலாதித்யன்<br>A. S. P. Aiyer, I. C. S. | 2 8 0 |
| 5. | அபிதான சிந்தாமணி<br>A. சிங்காரவேலு முதலியார் | 10 0 0 |

Regd. No. M. 3473


# தென் இந்திய ஆசிரியர்

# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

**பின் காலத்திற்கு ஒரு மூலதனம்**

ஆசிரியர்களுக்குள் — —

— — ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய

ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி

ஸ்தாபிக்கப்பட்டு

செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.

உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காரச்சாரி தெரு, — M. K. Ramamurti,

திருவல்லிக்கேணி, மதருஸ். — கௌரவ காரியதரிசி.


Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Sin garachari St., Triplicane, Madras.